வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Press Release No.19 Date :04.11.2025

**VOC Port, Tuticorin, crowned 'Green Visionary' at India Maritime Week 2025 after securing investment pacts worth ₹90,936 Crore**

India Maritime Week 2025 held at Mumbai from 27th October to 31st October witnessed strong international participation from Industry leaders and industry stakeholders from leading maritime nations, underscoring the event's growing stature as a global platform for collaboration and innovation in maritime sector.

Against this backdrop, V.O. Chidambaranar Port Authority, Tuticorin, had signed 29 MoUs with key stakeholders on Port Modernization, Ship Building, Information Technology, Sustainability, and other services, collectively valued at ₹90,936 crore.

Among the MoUs signed, three major MoUs in green energy sector collectively represent an investment exceeding ₹45,400 crore. The first agreement was penned with Green Infra Renewable Energy Farms Private Limited (GIREFPL), a Sembcorp group company, for the establishment of a common storage farm for green ammonia and other hydrogen derivatives, involving an investment of ₹25,400 crore. The second MoU was exchanged with ACME Green Hydrogen and Chemicals Private Limited for a 1,200 MTPD Green Ammonia Project valued at ₹15,000 crore, whilst the third was signed with CGS Energy Private Limited for a 300 TPD Green Ammonia production facility, at an investment of ₹5,000 crore. These projects are set to significantly bolster the port's standing as a future-ready Green Hydrogen Hub for southern India. The event also featured the launch of the Case study by the Indian Institute of Management (IIM), Calcutta, on Sustainable Transformation and Decarbonization in India's Maritime Sector - VOC Port's Journey to a Green Port. The case study highlights the inherent challenges of transitioning to sustainable operations, while showcasing VOC Port's achievements and its emerging role as a hub for green hydrogen initiatives.

The case study was released by Shri Sarbananda Sonowal Hon'ble Minister for Ports, Shipping and Waterways, in the presence of Shri Vijay Kumar, IAS, Secretary, MoPSW, S. Venkatesapathy, Joint Secretary, MoPSW, Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, VOC Port Authority and Prof. Ramya Venkateswaran, IIM Calcutta.

On the concluding day of the event featuring the awards ceremony, VOC Port was honoured with the 'Green Visionary' award for bringing out the ongoing and future green initiatives of the Port in the Port's pavilion. On behalf of the Port, Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson and Shri Rajesh Soundararajan, IAS, received

the award from Shri Sarbananda Sonowal Hon'ble Minister for Ports, Shipping and Waterways in the presence of Shri Shantanu Thakur, Hon'ble Minister of State for Ports, Shipping and Waterways and senior officials from MoPSW.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, VOC Port Authority, in his message conveyed that VOC Port has sealed multiple MoUs with various stakeholders and we anticipate substantial inflow of investments and the generation of many new jobs. We are working extremely hard to transform VOC Port into a port of the future, with green energy initiatives and the development of an outer harbour.

The above details were released in the Press Release by V.O.Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015, ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352332
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**செய்திக் குறிப்பு எண் :19** **தேதி 04:11:2025**

**இந்திய கடல்சார் வாரம் 2025 வ.உ.சிதம்பரனார் துறைமுகம், தூத்துக்குடி ”பசுமை தொலைநோக்கு பார்வை (Green Visionary) விருது வென்றது. ரூ.90,936 கோடி மதிப்பிலான முதலீட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பெற்றது.**

அக்டோபர் 27 முதல் 31 வரை மும்பையில் நடைபெற்ற இந்தியா கடல்சார் வாரம் 2025 நிகழ்ச்சியில் உலகின் முன்னணி நாடுகள், தொழில் தலைவர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் கலந்து கொண்டு, கடல்சார் துறையில் ஒத்துழைப்பு மற்றும் புதுமைக்கான இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்

இந்த பின்னணியில், தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், துறைமுக மேம்பாடு, கப்பல் கட்டுமானம், தகவல் தொழில்நுட்பம், நிலைத்தன்மை மற்றும் பிற சேவைகள் தொடர்பான முக்கிய முதலீட்டாளர்கள் மொத்தம் ₹90,936 கோடி மதிப்பிலான 29 புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில், பசுமை ஆற்றல் துறையில் உள்ள மூன்று முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மொத்தம் ₹45,400 கோடி முதலீட்டை குறிக்கின்றன.

முதல் ஒப்பந்தம், Sembcorp குழும நிறுவனமான Green Infra Renewable Energy Farms Pvt. Ltd. (GIREFPL) உடன், பசுமை அமோனியா மற்றும் பிற ஹைட்ரஜன் சார்ந்த பொருட்கள் சேமிக்க ஒருங்கிணைந்து வளாகம் அமைப்பதற்காக ₹25,400 கோடி முதலீட்டில் கையெழுத்தானது. இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தம், ACME Green Hydrogen and Chemicals Pvt. Ltd. உடன், 1,200 MTPD பசுமை அமோனியா திட்டத்திற்காக ₹15,000 கோடி மதிப்பில் கையெழுத்தானது. மூன்றாவது புரிந்துணர்வு ஒப்பந்தம், CGS Energy Pvt. Ltd. உடன், 300 TPD பசுமை அமோனியா உற்பத்தி நிலையம் அமைப்பதற்காக ₹5,000 கோடி முதலீட்டில் கையெழுத்தானது. இந்த திட்டங்கள் தென் இந்தியாவில் துறைமுகத்தை எதிர்காலத்திற்கு தயாரான பசுமை ஹைட்ரஜன் மையமாக உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

இந்த நிகழ்வில் மேலும், இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM), கல்கத்தா இந்தியாவின் கடல்சார் துறையில் நிலைத்தன்மை மாற்றம் மற்றும் கார்பன் குறிப்பில் வ.உ.சி துறைமுகத்தின் பசுமை பயணம்’ எனும் ஆய்வு அறிக்கை வெளியிட்டது. இந்த ஆய்வு, நிலைத்தன்மையுடன் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுக்கு மாறுவதில் உள்ள சவால்களை வெளிப்படுத்தி, வ.உ.சி துறைமுகத்தின் பசுமை சாதனைகளையும், பசுமை ஹைட்ரஜன் முயற்சிகளுக்கான முக்கிய மையமாக அதன் வளருகின்ற நிலையையும் வெளிப்படுத்துகிறது.

இந்த ஆய்வு அறிக்கை துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சர்பானந்த சோனோவால் அவர்கள் வெளியிட்டார். இந்த நிகழ்வில், கப்பல் துறை அமைச்சகத்தின் செயலர் திரு. விஜய் குமார், இ.அ.ப, கப்பல்

துறை அமைச்சகத்தின இணைச் செயலர் எஸ். வெங்கடேசபதி, வ.உ.சி துறைமுக ஆணையத் தலைவர் திரு. சுசாந்த குமார் புரோஹித் IRSEE மற்றும் IIM கல்கத்தாவின் பேராசிரியர் ரம்யா வெங்கடேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவின் நிறைவு நிகழ்ச்சியின் விருது வழங்கும் விழாவில் துறைமுகத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால பசுமை முயற்சிகளை துறைமுகத்தின் கண்காட்சி அரங்கில் வெளிகொண்டதற்காக வ. உ. சி. துறைமுகத்திற்கு பசுமை தொலைநோக்கு பார்வையாளர் (Green visionary) விருது வழங்கப்பட்டது. துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறைகளுக்கான மாண்புமிகு அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவாலிடமிருந்து விருதை வ.உ.சி துறைமுகத்தின் சார்பாக, தலைவர் திரு. சுசந்தா குமார் புரோஹித் IRSEE மற்றும் துணைத் தலைவா் திரு. ராஜேஷ் சௌந்தரராஜன், இ.அ.ப , பெற்றுக்கொண்டனர். துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறைகளுக்கான இணை அமைச்சர் மாண்புமிகு திரு. சாந்தனு தாக்கூர் மற்றும் கப்பல் துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் இந்த விருதைப் பெற்றார்.

வ. உ. சி துறைமுக ஆணையத்தின் தலைவர், ஸ்ரீ சுசந்தா குமார் புரோஹித் IRSEE செய்தியாளர்களிடம் கூறுகையில், வ. உ. சி துறைமுகம் பல்வேறு முதலீட்டாளர்கள் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது, இதன் மூலம் துறைமுகத்தின் உள் கட்டமைப்புகள் மேம்படுவது மட்டுமல்லாமல், பல புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் வரவேற்கிறோம் என்று தெரிவித்தார். அத்துடன் பசுமை எரிசக்தி முயற்சிகள் மற்றும் வெளி துறைமுகத்தின் வளர்ச்சியுடன் வ. உ. சி துறைமுகத்தை எதிர்காலத்தின் நவீன துறைமுகமாக மாற்ற நாங்கள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறோம் என்று கூறினார்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியுட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி